# சம்மாந்துறை பிரதேச சபையின் 02 வது பொது கூட்டறிக்கை
# 2018.04.10

சம்மாந்துறை பிரதேச சபையின் 02 ஆவது அமர்வு 2018.04.10 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.40 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப். ஐ.எல். நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. செல்வி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 14. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. ஜனாப். ஏ. யூசுப் லெப்பை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 19. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 20. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப். எம் ஏ.கே. முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகளும் இறைவனுக்கே, இது இந்த சபையின் முதல் அமர்வு இதற்கு முன் இருந்த சபையின் இரு அங்கத்தவர்களோடு இந்த சபையில் ஊர் மக்களை பிரதிநிதித்துவப்படுத்த தெரிந்தெடுக்கப்பட்ட சக உறுப்பினர்களையும் வரவேற்றவனாக. நமது சக உறுப்பினர் நஜீம் அவர்களின் தாயார் இறப்பினால் அவர் சில வேளை சபை அமர்வுக்கு வரமாட்டார் என்று நினைக்கின்றேன். அதையும் கவனத்தில் எடுத்தவனாக இந்த சபையை உத்தியோக பூர்வமாக ஆரம்பிப்பதற்கு முன் சில கருத்துக்களை முன்வைக்கலாம் என நினைக்கின்றேன்.

சம்மாந்துறை பிரதேச சபை, உள்நாட்டு அரசியலில் ஒரு வகையான சாதனை படைத்த சபையாக இருந்தது, என்பதற்கு உதாரணம் சென்ற சபை 52 அமர்வுகளில் சகல அமர்வுகளிலும் எல்லா தீர்மானங்களும் கட்சிபிரிவினைக்கு அப்பால் ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள். இந்த நாட்டின்

சரித்திரத்தில் அப்படியான ஒரு சபை அமைந்திருக்கும் என்று ஒரு சந்தேகம் இருக்கின்றது. அந்த பாரம்பரியம் தொடரவேண்டும் என்பது எனது அவா, நமக்குள் அரசியல் ரீதியான கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இந்த ஊரின் முன்னேற்றத்தைக் கருதி சகல விடயங்களையும் வெளிப்படையாக கலந்து ஆலோசித்து, நமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கப்பால் ஊரின் நலனைக்கருதி நம்மில் நம்பிக்கை வைத்து தெரிவு செய்த மக்களின் நலனைக்கருதி நாம் ஒரு குடும்பமாக, ஒரு சபையாக இயங்க வேண்டும் என்பது இந்த ஊர் மக்களின் எதிர்பார்ப்பு.

நாம் இந்த சபையின் தவிசாளர், பிரதித் தவிசாளர் தெரிவில் நாம் சட்டரீதியாக பிரிந்திருந்தாலும் இன்று நாம் அமர்வது சம்மாந்துறையின் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் உறுப்பினர்களே. அன்று நான் ஊழியர் மத்தியிலும் ஆதரவாளர்கள் மத்தியிலும் பேசிய போது கூறிய ஒரு முக்கிய காரணம் என்னவென்றால், நாம் எல்லோரும் மனிதர்கள் நமக்கு முடிவுகள் எடுக்கும் போது நமக்குள் இருக்கும் ஆகப் பெரிய போராட்டம் நமது மனச்சாட்சியோடு (நப்சோடு) போராடுவது திருக்குர்ஆனில் சூறா அல் - ஹஜ்இல் இறைவன் கூறுகின்றான் ‘‘உனக்கு இந்த மன்னில் அதிகாரம் வழங்கப்படும் போது நீ இறை வனக்கத்தில் ஈடுபட வேண்டும். கொடை வழங்கவேண்டும், நல்லதை அரவனைத்து தீயதை ஒதுக்கிவாழும் சக்தி உனக்கு வர வேண்டும்’’ அப்படியானால் நமக்கு இருக்கும் ஆகப் பெரிய போராட்டம் நப்சுடன். அதை நாம் மனச்சாட்சிக்கு அடிபனிந்து, நமது சேவையில் இறங்குவோமேயானால் நிச்சயமாகநாம் நினைக்கும் இந்த ஒற்றுமையையும், அந்த இலக்கையும் அடையலாம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

அதனால் உங்களிடம் பணிவேடு உங்களை எல்லோரையும் அரவணைத்தவனாக வேண்டிக் கொள்வது, நாம் எல்லோரும் எல்லா விடயங்களையும் கலந்தாலேசித்து ஒரு தீர்மானத்திற்கு வந்து, அதை சபையின் தீர்மானமாக எடுத்து, மக்கள் முன்னிலையில் போகும் போது இது இந்நாரின் தீர்மானமோ, அந்நாரின் தீர்மானமோ, இந்தக்கட்சியின் தீர்மானமோ, அந்தக்கட்சியின் தீர்மானமோ இல்லாமல் இது சபையின் தீர்மானம். இது நாங்கள் எல்லோரும் கூடி எடுத்த முடிவு என்று துனிவோடு நாம் போவோமானால், நாம் எல்லோரும் எண்ணியிருக்கும் அபிவிருத்தியையும், ஒற்றுமையையும் பேனலாம், என்ற கருத்தோடு இந்த சபையின் நடவடிக்கையையும் ஆரம்பிக்கலாம் என நினைக்கின்றேன்.

இந்த சபையின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் போது, இந்த சபைக்கான சட்ட திட்டங்களை இந்த சபை ஏற்க வேண்டும். நான் அதை வாசிக்கின்றேன். அப்போது வாசித்து முடிந்ததும் ஒரு அங்கத்தவர் அதை பிரேரித்து இன்னொரு அங்கத்தவர் அதை ஆமோதித்து சபையின் அங்கீகாரம் பெற்ற விடயமாக எடுத்துக் கொள்வோம்.

**தீர்மானம் 01**

01. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்
02. 2012 /22 ஆம் இலக்க தேர்தல் திருத்தச் சட்டம்
03. 2012/ 21 ஆம் இலக்க விசேட ஏற்பாடுகள் சட்டம்
04. 1988 ஆம் ஆண்டின் 520 / 7 ஆம் இலக்க நியம துனை விதிகள் சட்டம்
05. 1989 ஆம் ஆண்டின் 554 / 5 ஆம் இலக்க நிதி நிர்வாக விதிகள்
06. 2016 ஆம் ஆண்டு 1949 / 05 ஆம் இலக்க சம்மாந்துறை பிரதேச சபை துணைவிதிகள்

இச்சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**தீர்மானம் 02**

நிதிக் கொடுப்பனவுக்கான அங்கீகாரம் (Approved) மற்றும் சான்றுறுதிப்படுத்தும் (Certification) அனுமதியையும் தவிசாளருக்கும், மற்றும் காசோலைகளில் கையெப்பம் இடுவதற்கான இரு அலுவலர்கள் (செயலாளர், நிதி உதவியாளர்) அவர்களை நியமிப்பதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**தீர்மானம் 03**

சபையில் கடமையாற்றும் நிரந்தர உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கான ஏப்றல் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையான சம்பளத்தினை வழங்குவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம். மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ தவிசாளர்:**

## ஆலோசனைக் குழுக்கள்:

இந்த சபை ஆகக்ககுறைந்தது 04 ஆலோசனைக் குழுக்கள் அமைக்க வேண்டியுள்ளது. அந்தக்குழுக்களோடு பொதுமக்களில் இருந்து அந்தந்த துறை சார்ந்தவர்களை உள்வாங்குவது நமது சபைக்கு உகந்ததாக இருக்கும். அதனால் நீங்கள் உள்வாங்கப்பட விரும்புகின்றவர்களையும், நீங்கள் சிபார்சு செய்கின்ற பொது மக்களின் பிரதி நிதிகளையும் இந்த சபைக்கு அறிவித்ததன் பின் அந்த பெயர்களை உள்வாங்கி அடுத்த சபையில் அந்த குழுக்களின் விபரங்களைஇந்த சபைக்கு நான் முன் மொழிகின்றேன்

## சபைக்கு சமர்ப்பிக்கப்படும் கடிதங்கள் மனுக்கள் மற்றும் விடயங்கள்:

இந்த சபையில் ஏறத்தாள 3 வருடங்களாக மக்களால் நியமிக்கப்பட்ட சபை இல்லாமல் நிர்வகிக்கப்பட்டது. இப்போது நாம் இந்த சபையின் சகல விடயங்களையும் இந்த சபையின் அங்கீகரத்தோடு முன்னெடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதில் நமக்கு ஆக பெரிய சவால் திண்மக்கழிவு முகாமைத்துவம்.சென்ற காலங்களில் சேர்க்கப்பட்ட கழிவுகள் தனியார் இடங்களில் நிரப்பப்பட்டு இன்று அது சட்ட சிக்கலாக மாறியுள்ளது. எந்தளவுக்கென்றால் Environment authority சம்மாந்துறை பிரதேச சபைக்கு எதிராக வழக்கு தொடரும் அச்சுறுத்தலைக் கூட விடுத்திருக்கின்றது. இது ஒரு பாரிய சவால். அந்த சவாலை இந்த சபை முன்னோக்கும் பொழுது குப்பை சேகரிக்கும் முறையில் மாற்றம் கொண்டுவர வேண்டும். அடுத்தது அந்த சேகரித்த கழிவை எப்படி முகாமைத்துவப்படுத்துவது என்பது ஒரு பாரிய சவால்.

CEB யின் கணிப்புப்படி ஏறத்தாள 4000 தெருலாம்புகள் இந்த ஊரின் பொருத்தப்பட்டுள்ளது.சென்ற சபை காலத்தில் நாங்கள் அதில் ஒரு விதிமுறையைக் கடைப்பிடித்திருந்தோம். எப்படியான இடங்களில் எப்படியான தெருலாம்புகள் பூட்டப்பட வேண்டும், அதில் ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும். இந்த மாற்றம் இனிமேல் அந்தந்த வட்டாரங்களின் அங்கத்தவர்களுக்கு அதை ஒழுங்குபடுத்தும் ஒரு கடமைப்பாடு வரும் என்று நினைக்கின்றேன்.

**வரவு செலவுத் திட்டம்:**
உங்கள் எல்லோருக்கும் வரவு செலவுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் மூன்று மாதங்கள் நிறைவடைந்திருப்பதனாலும் இந்த சபை உருவாக்கப்பட்டிருப்பதனாலும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். அதற்கு உதவுவதாக உங்களுக்கு ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிற்கும் உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி மக்கள் பங்களிப்புடன் செய்யப்பட்ட திட்டம் LAPDP வழங்கப்பட்டுள்ளது.

இதை மையமாக வைத்து அதிலும் திருத்தங்கள் நீங்கள் செய்ய வேண்டும் என்றால் உங்கள் வட்டாரங்களில் குழுக்களை கூட்டி அதில் திருத்தங்கள் செய்து சபைக்கு சமர்ப்பீர்களேயானால் வரவு செலவுத் திட்டத்தில் திருத்தங்கள் செய்யலாம்.

LAPDP திருத்தம் செய்வதற்கு யார் யார் அழைக்கப்பட வேண்டும் என்ற விதிகளை செயலாளரிடம் அல்லது உள்ளூராட்சி உதவியாளரிடம் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

இந்த சபையின் அங்கத்தவர்கள் எல்லோரும் அரசாங்கத்தின் பங்காளி கட்சிகளின் பிரதி நிதிகள். நாம் பிரதி நிதித்துவப் படுத்திய கட்சிகளின் வளங்களை ஊருக்காக இந்த சபை மூலம் எந்தத் தடையுமின்றி, எந்தபாரபட்சமுமின்றி நிறைவேற்றுவதற்கு நான் உங்களுக்கு உறுதி மொழி தருகின்றேன். நாம் இந்த ஊரை அபிவிருத்தி செய்ய வேண்டும். அப்படியானால் எல்லா வளங்களையும் அந்தந்த அமைச்சர்களிடம் முன்வைத்து, அவர்களினால் பெறக்கூடிய சகல உதவிகளையும் பெற்று இந்த சபையினூடாக அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த முடியும்.

**தீர்மானம் 04**
மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயோதிபர்களின் வசதிக்காக அலுவலகத்திற்கு மின் உயர்த்தி Lift அமைப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**தீர்மானம் 05**

ஹிஜ்றா சந்தியிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தின் கடிகாரத்தினைத் திருத்தம் செய்வதுடன், அதற்குரிய பராமரிப்பு ஒப்பந்தம் செய்வதற்காக சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**தீர்மானம் 06**

அலுவலகம், பொதுச் சந்தை, அப்துல் மஜீட் பொது மண்டபம், விலங்கறுமனை ஆகியவற்றுக்கு சூரிய சக்தி மின்பிறப்பாக்கிகளைப் பொருத்துவதற்காகவும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் சுற்று நிரூபத்திற்கமைய எமது பிரதேசத்தில் வலுவூட்டல் செயற்திட்டத்திற்கமைய - 14 வேலைத்திட்டங்களையும், முதலீட்டு செயற்திட்டத்திற்கமைய - 05 வேலைத்திட்டங்களையும், பின்தங்கிய உள்ளூராட்சி சபைகளின் வருமானங்களை ஊக்குவிற்கும் செயற்திட்டத்திற்கமைய - 02 வேலைத்திட்டங்களையும் முன்மொழிவாக சமர்ப்பிக்கசபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர்:**
ஹிஜ்றா பொதுச் சந்தையினை திருத்துவது சம்பந்தமாக கௌரவ உதவித் தவிசாளர் ஜெயச்சந்திரன், கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள், கௌரவ உறுப்பினார் அச்சி முஹம்மட் அவர்கள், கௌரவ உறுப்பினர் அஸ்வர் அவர்கள், கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்கள். நாம் ஒரு குழுவாக என் தலைமையில் இயங்கி சில கருத்துகளை பரிமாறி இந்த மார்கட்டை புணரமைப்பதா? அல்லது நகர திட்டமிடல் அமைச்சோடு சேந்து பாரிய மாற்றத்தைக் கொண்டுவர முடியுமா? என்பதை ஆராய்வது உகந்தது என்று நான் நினைக்கின்றேன்.

**தீர்மானம் 07**

ஹிஜ்றா பொதுச் சந்தையில் தற்போது மார்கட் மேர்பார்வையாளரால் சுட்டிக்காட்டப்பட்ட அவசரமான திருத்தங்களைச் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எம். முஸ்தபா |

**தீர்மானம் 08**

அலுவலகத்திற்கான வெளிப்பகுதியிற்கு பெயின் பூசுவதற்கும், நிதி, திட்டமிடல் பிரிவுகளுக்கு மின் விசிறிகளைப் பொருத்துவதற்கும், தேவையான திருத்தங்களைச் செய்வதற்கும் மற்றும் மின் பிறப்பாக்கிகளின் பராமரிப்பு ஒப்பந்தம் செய்வதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**தீர்மானம் 09**

ஆளணி மீளமைப்புச் செய்தல், இதற்கமைய அத்தியவசியமாக தேவையான 10 சுகாதார தொழிலாளிகளை தற்காலிகமாக நியமிப்பு செய்வதற்காக சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம். முஸம்மில் |

**தீர்மானம் 10**

தற்போது 07 திண்மக்கழிவகற்றல் வாகனத்திற்கு 05 சாரதிகள் இருக்கின்றனர். ஆகவே மேலதிகமாக தேவையான 02 சாரதிகளும் மோட்டர் கிறேடர், ஜனாசா வாகனம், ஆட்டோ ஆகியவற்றுக்கு 03 சாரதிகள் மொத்தமாக 05 சாரதிகளை தற்காலிக அடிப்படையில் நியமிப்பு செய்வதற்காக சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**கௌரவ தவிசாளர்:**

51 கிராம சேவை பிரிவுகள் இருந்தும் இப்போது வரி வலைக்குள் இருப்பது 21 கிராம சேவகர் பிரிவுதான். 2013.04.26 ஆம் திகதி இன்னும் 22 கிராம சேவகர் பிரிவுகளை உள்வாங்குவதற்காக கெசட் பன்னியிருந்தும் அதற்குரிய வேலைகள் 22 பிரிவுகளின் பாதைகளில் உள்ள ஏறத்தாள 1275

குடும்பங்களின் விபரங்கள் இலக்கமிட்டு நாம் Proposal ஒன்று மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு valuation Departmen க்கு கொடுக்க வேண்டும்.

**தீர்மானம் 11**

ஓய்வு பெற்றுச் சென்ற வருமான வரி உத்தியோகத்தர் Mr.MA.றசூல் என்பவரை புதிதாக ஆதனவரி அறவிட உத்தேசிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ள 06 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எம். முஸ்தபா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**தீர்மானம் 12**

விளையாட்டுத் தொகுதியிலுள்ள SLIATE நிறுவனத்தின் ஒப்பந்தத்தை மீண்டும் 06 மாத காலத்திற்கு வாடகைத் தொகையில் மாற்றம் செய்து நீடிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம். மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர்:**

பொதுச் சந்தையில் இருந்து 200 M க்குள் எந்த ஒரு அங்காடி வியாபாரமும் நடாத்த கூடாது என்பது எனது வேண்டுகோள். இது தொடர்பாக கலந்தாலோசித்து முடிவு எடுத்து அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பிர் ILM.மாஹிர் அவர்கள்:**

அத்தீர்மானத்தை உடனடியாக எடுக்காமல் காரணம் அவர்களது வாழ்கையோடு சம்பந்தப்பட்ட விடயம் உடனடியாக நிப்பாட்டினால் அவர்களது வாழ்வாதாரம் அடிபடக்கூடும் எனவே அதனைக் கலந்தாலோசித்து அடுத்த அமர்வில் எடுத்துக் கொள்வோம்.

**தீர்மானம் 13**

அலுவலகத்தின் CCTV கமரா மற்றும் Wi-Fi இணைப்பினைத் திருத்தம் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |

**தீர்மானம் 14**

கௌரவ தவிசாளர் மற்றும் சபை மண்டபம் என்பவற்றுக்காக வெயிலில் இருந்து பாதுகாப்புக்காக திரைச் சீலை அமைப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம். முஸம்மில் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம். சித்தி நிலுவ்பா |

**தீர்மானம் 15**

ஒவ்வெரு சபை அமர்வுகளுக்குமிடையில் சபையின் நடவடிக்கைகளுக்குத் தேவையான செலவுகளையும், தடையின்றி தவிசாளர் அவர்கள் கொண்டு செல்வதற்கும், அடுத்த சபையில் அதற்கான அங்கீகாரம் பெறுவதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது. இதற்கமைய மாதத்திற்கு அவசர செலவுகளுக்காக ரூபா. 100,000.00 செலவீடு அனுமதியினை தவிசாளருக்கு வழங்க ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எம். முஸ்தபா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

Hospital Development Society இற்கு கௌரவ உறுப்பினர்களிலிருந்து இருந்து 02 அங்கத்தவர்களை நியமிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி உங்களின் அபிப்பிராயத்தை கேற்ற விரும்புகின்றேன் இந்தக் கருத்தை நீங்கள் உத்யோக பூர்வமாக அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்..

**கௌரவ உறுப்பிர் SM.முஸ்தபா அவர்கள்:**

இந்த ஊரின் அபிவிருத்திக்காக உருவாக்கப்படும், அல்லது கூட்டப்படும் எல்லா சபைகளுக்கும், எமது சபையின் உறுப்பினர்களை உள்வாங்கப்படுவது உகந்தது என்பது எனது அபிப்பிராயம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

இந்த கருத்தை உள்வாங்கியவனாக இது சபையின் முடிவாக ஏற்று அந்த நிருவாகங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**

மாதாந்த சபை கூட்டங்களின் அட்டவனை தயாரித்து உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் மாற்றங்கள் ஏதும் இல்லாவிடில் இக் கூட்டங்கள் ஒவ்வொரு மாதத்திலும் 2வது செவ்வாய் கிழமையில்காலை 9.30 மணிக்கு நடாத்தப்படும்.

**தீர்மானம் 16**

தற்போது மாகாண சபையின் பராமரிப்பிலுள்ள ஜனாதிபதி விளையாட்டுக் கட்டடத் தொகுதிக்குரிய முழு அதிகாரத்தையும் பிரதேச சபையின் பொறுப்பில் பெறவும், விளையாட்டுக் கட்டடத் தொகுதியிலுள்ள நீச்சல் தடாகத்தினை திருத்தம் செய்வதற்கும், அதனைப் பராமரிக்க, பராமரிப்பு ஒப்பந்தம் செய்யவும்சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எம். முஸ்தபா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

தேநீர் இடைவேளையினைத் தொடர்ந்து சபையின் 02 வது அமர்வு ஆரம்பிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர்**:
இது நமது முதல் அமர்வு என்பதனால் ஒவ்வொரு உறுப்பினருக்கும் 05 நிமிடங்கள் உரையாற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பம் அழிக்கின்றேன்.

### பிரதித்தவிசாளர் கௌரவ வீ. ஜெயச்சந்திரன்:

இன்று எமது சபையின் தவிசாளராக கௌரவ தவிசாளர் அவர்களும்,உப தவிசாளரன நானும் தெரிவாகியிருப்பது உன்மையிலே நாட்டிற்கு தேவையான ஒரு விடயம். ஏனெனில் யார் எந்த நிலைப்பாட்டில் இருந்தாலும், இந்த இரண்டு சமூகமும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பினைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆகவே ஒரு சமூகத்தை விட்டு விட்டு இன்னொரு சமூகம் முன்னுக்கு போகவேண்டும், அல்லது இந்த சமூகத்தை நாம் பின்தள்ளிச் செல்ல வேண்டும் என்ற என்னம், சிந்தனை யாருக்கும் வருமேயானால், நிச்சயமாக அது எமது சமூகங்களை ஒரு பின்னடையச் செய்வதற்கான வழியேயாகும். அது ஒரு போதும் எங்களது உறுதியான வாழ்விற்கும், நிலையான ஒரு எதிர்காலத்திற்கும், ஒரு உந்து சக்தியாக அமையாது. ஆகவே நாம் அனைவரும் ஒன்றாக சிந்தித்து ஒன்றாக செயற்பட வேண்டிய ஒரு மனநிலைக்கு மாற வேண்டும். அதற்கான சூழலை இந்தத் தேர்தல் பெற்றுக் கொடுத்திருக்கின்றது. அது மட்டுமல்ல இறைவனால் இதற்கான திட்டம் வகுக்கப்பட்டிருக்கின்றது என்று நான் நினைக்கின்றேன். ஏனெனில் எத்தனை திட்டங்கள் ஒவ்வெருவர் தீட்டியிருந்தாலும், அதனை செயற்படுத்த திட்டமிட்டிருந்தாலும் அதற்கெல்லாம் பெரியவன் இறைவன். ஆனால் இன்று சமூகத்தை எடுத்துக் கொண்டால் (பல் வேறுபட்ட) விமர்சனங்கள் இளம் தரப்பினர்களிடத்தில் இருந்து வருகின்றது. ஆனால் அவர்கள் முதியவர்களாகின்றபோது அவர்களது மனநிலை மாறும் என்பதே எனது எண்ணப்பாடு.

நான் முகம் கொடுக்கும் ஒரு சில விடயங்களை இந்த சபைக்கு முன்மொழிகின்றேன்.

மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு மூன்று பக்கத்திலிருந்து செல்கின்ற கோணத்தில் தெருநாய்கள் அமர்ந்திருக்கின்றது அதனை அகற்ற வேண்டும். மற்றும் யானைப் பிரச்சினையைத் தீர்த்தல் .

10 வட்டாரங்களிலும் உள்ள பிரதிநிதிகள் சபையினால் சமர்ப்பிக்கப்படும் புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் போது, விசேடமாக நூலகங்களுக்கு புத்தகம் வழங்குதல், பாலர் பாடசாலைக்குத் தேவையான மலசல கூட வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், அத்தியவசியமாக குடிநீர் தேவைப்படும் பிரதேசங்களுக்கு குடிநீர் வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்.

பென்கள், சிறுவர்களுக்குத் தேவையான, சுகாதார நிலையத்திற்கு தேவையான கதிரை, மேசை வழங்கல்

மல்வத்தையில் விசேட அதிரடிப்படை முகாம் அமைந்திருந்த இடங்களில் கானப்படும் மன் திட்டுக்களை சபையின் உபகரணங்களைக் கொண்டு அகற்றி, பாடசாலையின் மைதானத்தில் உள்ள மடுக்களை நிரப்புவதற்காக நடவடிக்கைகளை செய்து தருமாறு வேண்டிக் கொண்டு எனது உரையை முடிக்கின்றேன் நன்றி.

### கௌரவ உறுப்பினர் ஏஸ்.எம்.எம். முஸ்தபா:

கௌரவ தவிசாளர் அவர்களே,

இன்று ஒரு விசேடமான அமர்விலே இருந்து கொண்டிருக்கின்றோம்.இவ்வளவு சுமூகமான முறையில், சுமூகமான மநோநிலையில் இந்த அமர்வைக் கொண்டு செல்வதற்கு வழிவகுத்துத்தந்த வல்ல இறைவனுக்கு நான் நன்றி செலுத்துகின்றேன்.

சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அரசியல் வன்முறையற்ற நிலையில் தேர்தல் நடைபெற உதவிய மக்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த சபையில் இந்த ஊரின் வளர்சியை நோக்காகக் கொண்டு ஊரின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டே எல்லா சபை தீர்மானமும் அமைந்தது. நாங்கள் ஊரின் ஓவ்வொரு வீதி வீதியாக, வீடு வீடாக சென்று ஊரின் அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும். மத்திய அரசு மாகாண அரசு ஏனையவைகளைக் கொண்டு ஊரின் செயற்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும்.

காலையில் வீதி வீதியாக விற்கும் நடைபாதை வியாபாரிகளைக் கவனத்தில் கொண்டு ஏழைகளைப் பாதிகாமல் செயற்படுவதோடு, வீதிகள், தெரு லாம்புகள் போன்ற பிரச்சினைகளுக்கு அப்பால் சென்று ஊரில் பாரிய திட்டங்களைக் கொண்டுவர வேண்டும். அந்த வகையில் வைத்தியசாலை, பிரதேச செயலகம், கல்விக் காரியாலயம் மற்றுமுண்டான அரசாங்க காரியாலயங்கள் பாராமுகமாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாம் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் அவைகளையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். மக்களின் எதிர்கால நோக்கங்கள் கருதி நாங்கள் இந்த விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் அம்பாரையில் நடைபெறும் அபிவிருத்திக் கூட்டங்களிலும், இங்கு இருக்கின்ற எமது சகல உறுப்பினர்களும் கலந்து கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல் DCC, கூட்டம், நம்பிக்கையாளர் சபைக் கூட்டம், வைத்தியசாலை சம்பந்தமான குழுக் கூட்டம் போன்ற ஊரின் அபிவிருத்தி சம்பந்தமான அனைத்து கூட்டங்களுக்கும் சபையின் கௌரவ உறுப்பினர்களும் கலந்து கொள்ள வேண்டும்.

ஊரின் அபிவிருத்தி வேலைகளில் பாதைகளை எடுத்துக் கொள்கின்ற போது UNOPES நிறுவனத்தினால் போடப்பட்ட பாதைகள். அத்தனை பாதைகளும் புனரமைக்கப்பட வேண்டும். மத்திய வீதி, பழைய மார்கட் வீதி விரைவில் புனரமைக்கப்பட வேண்டும்.

கல்வி அபிவிருத்தி சம்பந்தமாக வீரமுனையில் வாசிக சாலை, விளையாட்டு சிறுவர் பூங்கா அமைப்பதற்காகவும் முன் மொழிகின்றேன்.

ஊரின் அபிவிருத்தியை எடுத்து நோக்குகின்ற போது ஊரின் BusStand மத்திய மாகாண அரசுகளுடன் இணைந்து தாபிக்க முன் மொழிகின்றேன்.

ஊரினை அழகு படுத்துவது சம்பந்தமாக, எமது ஊரின் Sports Complex சம்மாந்துறை பிரதேச சபையின் கன்காணிப்பின் கீழ் இருக்க வேண்டும். அந்த விடயத்திற்கு மீண்டும் எங்களது கௌரவ தவிசாளர் அவர்களுக்கு நன்றி கூறவேண்டும். அவ்வாறாக இவ் விளையாட்டுக் கட்டடத்தொகுதி சரியான பராமரிப்பில் இல்லை என்பதுடன், அது எந்தஒரு சந்தர்ப்பத்திலும் எமது சபையை விட்டுப் போகக்கூடாது என வேண்டி,இந்த சந்தர்ப்பத்தை வழங்கியவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சிமுஹம்மட்:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். இந்த சபையில் மீண்டும் வந்து உரையாற்றுவதற்கு வாய்ப்பளித்த இறைவனுக்கும், எங்களது கட்சிக்கு வாக்களித்த மக்களுக்கும், நன்றி கூறியவனான இவ்விடத்தில் அனைவருக்கும் வணக்கம் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி கௌரவ தவிசாளர் அவர்களே,

நாங்கள் அனைவரும் சம்மாந்துறை தாய்மன்னை முழுமையாக பயன்படுத்த வேண்டும். அந்த வகையில் முதல் விடயம் தெருவிளக்கு. ஆரம்பதியிலிருந்து - பாண்டிருப்பு வரை பர்தீர்களென்றால்

26 தெருவிளக்குகள் காணப்படுகின்றன. மருதமுனையிலிருந்து - காரைதீவு ஜங்சன் வரை 450 தெருவிளக்குகள் உள்ளன. நாமலோயாவிலிருந்து - அம்பாரை Town வரை 10 இற்கும் குறைவு ஆனால் சம்மாந்துறையில் 4000 தெருலாம்பு உள்ளது.

அடுத்ததாக குப்பை: பிராதனமாக எங்களுக்கு இருக்கின்ற பிரச்சினை கழிவு குப்பை. இந்த குப்பை முகாமைததுவம் பல நாடுகளில் வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து மின் உற்பத்திக்காக பயன்படுத்துகின்றனர். சம்மாந்துறையில் நாங்கள் ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு அந்த பொறியியலாளர்களுடன் தொடர்பு கொண்டு சம்மாந்துறை பிரதேச சபையின் அனுசரனையுடன் நாங்கள் அந்த முயற்சியை மேற்கொண்டு, கொம்போஸ் பசளையும், மின் உற்பத்தி செய்து அனைத்து ஊர்களுக்கும் கொடுக்கக்கூடிய வளமாக நாங்கள் அதை மாற்ற வேண்டும். சம்மாந்துறையை நாம் மற்ற ஊர்களுக்கு ஓர் உதாரணமான எடுத்துக் கொள்ள வேண்டும்.

எங்களுக்கு தற்போது கிடைத்திருக்கின்ற செயலாளர் உங்களோடு இணைந்து சேவை செய்யக்கூடிய ஒருவர். அதிலேயும் நான் பெருமைப்படுகின்றேன்.

மணிகூட்டுக் கோபுரம் நாங்கள் முகைடீன் குளக் டவர் என்று சொன்னமாதிரி VC நூலகத்தையும் முகைடீன் நூலகம் எனப் பெயர் பதித்து நூலகத்தையும் பிரயோசனப்படுத்த வேண்டுகின்றேன்.

சம்மாந்துறையில் பேமிட் உள்ள அனேகமான குடும்பங்கள் 05 பேர்ச்சுக்கு உட்பட்ட காணியை தனது பிள்ளைக்கு மாற்றிக் கொடுக்க இயலாமல் மிகவும் கஸ்டமான ஒரு குழப்ப நிலையை அடைந்து கொண்டிருக்கின்றார்கள். இதை நாங்கள் இந்த சபையில் 03 அல்லது 3.5 பேச்சஸ்கான ஒரு சபைத் தீர்மானமாக எடுத்து அதனை பிரதேச செயலகத்திற்கு அறிவித்து முக்கியமான பிரச்சினையிலிருந்து நாங்கள் விடுபட வேண்டும்.

தமிழ் முஸ்லீம் என்ற பிரிவு நாங்கள் பார்க்கமாட்டோம். இதற்கு முந்தியிருந்த சபை எடுத்துக்காட்டு மல்வத்தைக்கு நாங்களாக சென்று வாசிகசாலை அமைத்தோம். மல்வத்தை மயானம் திருத்தல், மல்லியத்தீவு மயானத்திற்கு மதில்கட்ட உதவி புரிந்தோம். தெருவிளக்குகள் போடப்பட்டது. நாங்கள் அடிமனதில் கூட வேறாக பார்த்தில்லை. நீங்கள் எங்களுக்கு உடன் பிறவா சகோதரர்கள். உங்களை நாங்கள் அரவனைத்து சம்மாந்துறை தாய் என்ற நினைப்போடு சம்மாந்துறையை கட்டியெழுப்ப நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்வர்:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம்.கௌரவ தவிசாளர் அவர்களே,

கடந்த 03ம் மாதம் 27 ம் திகதி எம்முடைய உத்தியோக பூர்வ அமர்வின் போது கட்சியின் வேறுபாடுகளின்றி எல்லோரையும் சந்தோசமாக வரவேற்ற எமது பிரதேச சபை செயலாளர் உத்தியோகத்தர், ஏற்பாட்டுக் குழுவினர், அனைவருக்கும் எனது சார்பாகவும், எனது கட்சி சார்பாகவும், இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் சார்பாகவும் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்முடைய கௌரவ உறுப்பினர் தொட்டுச் சென்ற காணிப்பிரச்சினை சம்மந்தமாக விளக்கமாக பேச வேண்டியுள்ளது எம்முடைய ஊரில் இருக்கின்ற அதிகப்படியான பிரச்சினைகளில் முக்கியமான பிரச்சினை வாழ்விடக் காணிகளுக்கான அனுமதிப்பத்திரமின்மை. அனுமதிப்பத்திரம் இருக்கின்ற காணிகளும் உறுதியாக்கப்படாமை, காரணம் சனத்தொகை கூடி நிலப்பரப்பு குறைந்துள்ளது. எனவே இந்த விடயத்தை ஒரு தீர்மானமாக எடுத்து 05 பேச் காணிக்கு வழங்க இருக்கின்ற அந்த உத்தரவுப்பத்திரத்தை 03 பேச்சுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான தீர்மானத்தை இந்த சபையினூடாக பிரதேச செயலாளர், மாவட்ட செயலகம், அரசாங்க அதிபர் மற்றும் மாகாண

சபைகள் தேசிய அரசியலுக்கும் இவ்விடயத்தை எற்றிவைக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் இச்சட்டத்தை நிச்சயமாக இயற்ற முடியும் என்ற நம்பிக்கையும் இருக்கின்றது.

சம்மாந்துறையில் செய்யப்பட்டு வருகின்ற பாதைகள் பராமரிப்பின்னையால் அந்தப் பாதையினை எமது சபையினால் குறைந்தது 02 வருடங்களுக்கு ஒருமுறை பராமரிக்கும் திட்டமாக தீர்மானமாக எடுக்க வேண்டுமென்று வாய்ப்புக்கு நன்றி கூறியவனாக விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஆர். வளர்மதி:**

கௌரவ தவிசாளர் அவர்களே,

கடந்த அரசியல் தேர்தலில் கைச்சின்னத்தில் வெற்றி பெற்று தமிழ் பெண்மனியாக இந்த சபைக்கு வந்தமைக்கு இறைவனுக்கு நன்றியைத் தெரிவித்தவளாக,

கடந்த காலங்களில் மல்வத்தை பிரதேசங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள், விதவைகள் இன்று தொழிலைக்கூட நிரந்தரமாக தொடர முடியாத நிலையில் கணவரை இழந்து பிள்ளைகளை வளர்ப்பதில் கஸ்டமான நிலையில் போய் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் எதிகாலத்தை முன்னிட்டு தவிசாளர் அவர்கள் அவர்களுக்கான வாழ்வாதாரங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

எமது கிராமத்தில் யுத்தத்தில் இளைஞர், யுவதிகள் இன்று வெளிநாடு சென்று விட்டு தமது தொழிலை தொடர முடியாதவர்களுக்கு தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

பிரதேச சபை கட்டடங்கள் செயலிழந்த நிலையில் உள்ளது. உடைந்து ஒரு பயன்பாட்டுக்கு உதவாத நிலையில் இருக்கின்றது. எனவே பிரதேச சபைக் கட்டடத்தை திருத்தி மக்களுக்கு தர வேண்டும் என்று இந்த சபையில் தவிசாளர் அவர்களிடத் கேட்டுக் கொள்கின்றேன்.

வைத்திய சாலையில் மூவின மக்களும் வந்து போகும் இடம் சரியான ஒரு வைத்தியர், தாதியர் இல்லாத நிலையில் உள்ளது. கற்பினித் தாய்மார்களுக்குகான பராமரிப்பு நிலையம் இல்லை, சிறு பிள்ளைகளின் கிளினிக் போன்றவைகளுக்கு தனியான ஒரு கட்டடம் அமைத்துத்தருதல். கிளினிக் சென்டர் உடைந்து காணப்படுகின்றது. கற்பினித்தாய்மார்களின் நலனைக்கருதி புணரமைத்துத்தருமாறு தவிசாளர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மல்வத்தைப் பிரதேச மக்களுக்கான தனியான மலசல கூடம் அமைத்துதர வேண்டும்.

மஜீட்புர மக்கள் இன்று பத்திரிகைகளைக்கூட படிக்க முடியாமல் உள்ளனர். எனவே அங்குள்ள நூலகத்தை பராமரித்துதருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

53 மாணவர்கள் கல்வி கற்கும் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு மலசலகூடம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

யானைத் தொல்லை. அதன்காரணமாக எங்களது பிரதேசத்திற்கு மின் குமிழ்களை வழங்குமாறு வேண்டுகின்றேன்.

பாதைகள் புணரமைப்பும், வடிகான் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்குமாறு தவிசாளர் அவர்களிடம் மிகவும் தாழ்மையுன் கேட்டு; இந்த சபையில் பொறுமையுடன் எனது உரையை கேட்டுக்கொண்டிருந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்த சாமி**

கௌரவ தவிசாளர் அவர்களே,

1917 ஆம் ஆண்டில் தமிழ் விடுதலைப் போராட்டத்திலிருந்து விடுதலை பெற்றவர்கள். தாங்கள் தங்களையே ஆள வேண்டும் என்று கோசமிட்டதற்கினங்க அந்தக் காலத்திலே ஜனாதிபதியாக இருந்த JR.ஜெயவர்தன அவர்கள் இந்தபிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும் என்று அந்தக்காலத்திலே சிந்தித்ததற்காக ஒரு திட்டத்தை கொண்டுவந்தனர். அந்த திட்டம்தான் பிரதேச சபை, மாகாண சபை, மாவட்ட சபை, கிராமோதய சபை. இந்த நான்கு சபைகளும் ஒரே சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டவை. அதை அரசியல் வாதிகள் சொல்வார்கள் ஒரு தாயின் வயிற்றில் ஒட்டிப்பிறந்த 04 பிள்ளைகள் போன்றது. ஒன்று வலுவிளந்துள்ளது மற்றயது வலுவுள்ளது.

நாங்கள் எங்களுக்குத் தேவையான நிதி வளங்களை நாங்களே சேகரித்து அதை சொத்தாக நாங்களே பயன்படுத்தகூடிய நிலை ஏற்படுகின்றது. காரணம் பொருளாதார வளர்சி காரணமாக நிதிகளை ஈட்டக்கூடிய வாய்ப்பு அதிகரித்துக் காணப்படுகின்றது.

கட்சி பேதமின்றி செயற்படுவதோடு, ஒரே குடும்பமாக செயற்பட்டு நகர அபிவிருத்தியையே முக்கியமாக கருத வேண்டும்.

நிதிகளைத் திரட்டுவதற்கான ஆலோசனைகளை வழங்கி பொதுவான திட்டங்களை நடைமுறைப்படுத்த உதவி செய்ய வேண்டும்.

வாசிகசாலை அமைத்தல், வீரமுனை கோவில் வீதியை செப்பனிட்டுத் தருவதற்கு கௌரவ தவிசாளர் அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

மிருகக்கழிவுகளை பக்குவமாக அகற்றுதல் வேண்டும் 2018.03.31 ஆம் திகதி நடைபெற்ற சம்பவம் இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ. முஹம்மட் சஹீல்:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். கௌரவ தவிசாளர் அவர்களே,

சமூகம் நன்மையடைய வேண்டும். வாக்களித்த மக்களுக்காக செயற்படுதல் வேண்டும்.

வறுமையை ஒழித்து அதற்கான வேலைத்திட்டம் அமைத்து உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகளையும் செய்தல் வேண்டும்.

வீரமுனை வட்டாரம் அபிவிருத்தியில் பாரிய பின்னடைவு அடைந்துள்ளது. அவற்றையும் நிவர்த்தி செய்ய வேண்டும்.

2000 இளைஞர், யுவதிகள் இணைந்து தொழில் பேட்டையை மீண்டும் இப்பிரதேசத்தில் நிலை நிறுத்த வேண்டும்.

எமது பிரதேசம் கல்வியில் பின்னடைவை அடைந்து கொண்டு செல்கின்றது. அதனை நிவர்த்தி செய்வதற்காக இந்த சபை கூடிய கரிசனம் செலுத்த வேண்டும். கல்விக்குத் தேவையான அத்தனை விடயங்களையும் செய்ய வேண்டிய பொறுப்பு இந்த சபைக்கு உள்ளது. நமக்கு வாக்களித்த மக்களுக்கு நல்லாட்சி மிக்க அபிவிருத்தி மூலம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும்.

சமூகம் எனக்கு வழங்கிய அமானிதத்தை நிவேற்றுவேன் என்று இச் சபையின் முன்னிலையில் எடுத்தோம்பி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ. பௌசுல்லா:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். கௌரவ தவிசாளர் அவர்களே,

எமது ஊரில் சமீப காலமாக சிறு நீர் நோய் அதிகரித்து வருகின்ற காரணத்தினால் சுகாதார பணிமனையின் உதவியுடன் விளிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

நெல்லுப்பிடிச் சந்தியிலுள்ள Gat way இல் வரவேற்புரையை அரபு வசனத்திலும் எழுத வேண்டும்.

அமீர் அலி சிறுவர் பூங்காவிற்குரிய பொது மலசல கூடம் நிர்மானிக்கப்படவேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர்:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். கௌரவ தவிசாளர் அவர்களே,

எனக்குக் கற்றுத்தந்த ஆசான் முன்னிலையில் உரையாற்ற கிடைத்தமையிட்டு மகிழ்சியடைகின்றேன்.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மக்களின் கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை, என அதி மேதகு ஜனாதிபதி அவர்களும் தெரிவித்திருக்கின்றார்கள். இது சம்மாந்துறைக்கும் பொருந்தும். நாங்கள் இங்கு வருவதற்கு காரணமாக இருந்த சம்மாந்துறை பிரதேச சபை வாக்காள மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சம்மாந்துறை பிரதேச சபையில் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்வதற்காக இந்த சபை செயற்பட வேண்டும். கட்சி பேதங்களை மறந்து சம்மாந்துறையை எப்படி முன்னேற்றலாம். குறிப்பாக அடிப்படைத் தேவைகள் நீர், மின்சாரம், மலசல கூடம், பாதைகள் போன்றவற்றை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதில் கவனம் செலுத்துவதோடு, தெருக்களுக்கு பெயர் பலகை இடுவதற்கு ஒரு குழுவை நியமிக்குமாறும் கௌரவ தவிசாளர் அவர்களிடம் வேண்டி உரையை முடித்துக் கொள்கின்றேன் அஸ்ஸலாமு அலைக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ்:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். கௌரவ தவிசாளர் அவர்களே,

இந்த சபையில் உறுப்பினராக தேர்ந்தெடுத்த சம்மாந்துறை 06 ஆம் வட்டார வாக்காளர் மக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சபையின் உறுப்பினராக இருக்கின்ற ஒவ்வொரு நொடியும் மக்களுக்காக செயற்படுவேன். என்றும் திறன்பட செய்வேன் என்றும் சம்மாந்துறையின் 06ம் வட்டார அபிவிருத்திக்காக தங்களது ஒத்துழைப்பை தங்களிடம் கோருகின்றேன்.

ஒவ்வொரு நொடிப் பொழுதும் வாக்களித்த மக்களுக்கான பாரம்பரியங்களையும், பழக்க வழக்கங்களையும், பண்பாட்டையும் புறந்தள்ளாத வகையில் அந்த மக்களின் பங்களிப்புடன் செயற்படுவேன்.

சம்மாந்துறை பழய மார்கட் ஆலையடி சந்தையை மகளிர் சந்தையாகவும் அவற்றில் பூங்கா அமைப்பதற்கும்,

சம்மாந்துறை 1 ஆம் குறுச்சியிலுள்ள MPCS கிளையை வாசகர் மத்திய நிலையமாக அமைத்தல்

சம்மாந்துறை முஸ்லீம் மகளிர் வித்தியாலயத்திற்கு முன்பாக மரநடுகை திட்டத்திற்காகவும் சம்மாந்துறை 02 ஆம் வீதியில் முகைடீன் மஸ்ஜித் சின்னப்பள்ளி வாசலுக்கு முன்னால் அமைந்துள் பூங்காவை புனரமைப்புச் செய்ய வேண்டும் என்ற பல்வேறு திட்டங்களை முன்மொழிந்து கௌரவ தவிசாளர் அவர்களிடம் கையளிக்கின்றேன்.

இந்த சபைக்காக எந்தவிதத்திலும் நான் ஒத்துழைப்பை வழங்குவேன் என்றும் அல்லாஹ்வுக்கு நன்றியுடையவனாக எனது உரையை நிறைவு செய்கின்றேன்.நன்றி. வஸ்ஸலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம். ஜிப்ரி:**

அஸ்ஸலாமு அலைக்கும். கௌரவ தவிசாளர் அவர்களே,

07 ஆம் வட்டாரத்தில் எனது பகுதியில் 03 பாடசாலைகள் உள்ளது அதில் 02 பாடசாலைகள் (அல் அர்சத், அஸ்ஸமா) அதனைச் சுற்றிவர மதில் இல்லை, மிகவும் பின்தங்கிய பாடசாலையாக இருக்கின்றது. அங்கு சிறுவர் பூங்காக்கள் தேவை, பாதைகள் அபிவிருத்தி செய்ய வேண்டும். பாதையில் வியாபாரம் செய்வதனால் பாதையில் செல்லும் மக்களுக்கு அசௌகரியமாக இருக்கின்றது. இதனை தங்களது கவனத்தி கொள்ளுமாறு கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம்:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். கௌரவ தவிசாளர் அவர்களே,

உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் இந்தமுறை நடைபெற்ற தேர்தல் சற்று வித்தயாசமான முறையிலே நடாத்தப்பட்டது.

நாம் அனைவரும் ஒன்றினைந்து அனைவரது தேவைகளையும் பூர்தி செய்ய வேண்டும். திண்மக்கழிவு பிரச்சினைகளை தீர்க்கவேண்டும். அதிகமான திண்மக் கழிவுகளை வண்டுவாய்க்கால் வீதியிலேயே போட்டுவிட்டுச் செல்கின்றார்கள். இந்த வேலை நள்ளிரவு வேளைகளிலே நடக்கின்றது. உதாரணமாக நகர்புறங்களில் இருக்கின்ற மக்கள் நள்ளிரவு வேளைகளில் வீதியின் இருமரங்கிலும் போட்டுவிட்டுச் செல்கின்றார்கள். இந்த இடத்தினை பிரதேச சபையினூடாக துப்பரவு செய்து பெயர்பலகை இட்டும் கூட அதனை செய்கின்றார்கள்.

அவ்வாறே அந்தக்கழிவுகளைக் கொட்டுவதால் அந்தக் கழிவுகளை சாப்பிட காட்டு யானைகள் இரவு வேளைகளிளே வருகின்றதனால் மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

புளக் ஜே 02 ஆம் பிரிவில் உள்ள கைகாட்டி சந்தியிலிருந்து வண்டு வாய்கால் வீதி வரை செல்கின்ற பாதைகளுக்கு புதிதாக தேவைப்படுகின்ற இடங்களுக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட வேண்டும். காரணம் அந்த வீதியூடாக விவசாயிகள் செல்வதனால் காட்டு யானைகளிடமிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காக மின் விளக்குகள் அவசியமாகின்றது.

செந்நெல் கிராமம் 02 ஆம் வீதியிலுள்ள 20 வீட்டுத் திட்டம் என்று செல்கின்ற அந்தப் பிரதேசத்தில் மல்கம்பிட்டி GMMS எனும் பாடசாலைக்குச் செல்கின்ற பாதை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அவற்றையும் திருத்தம் செய்ய வேண்டும்.

சென்னல் சாஹிறா பாடசாலை வீதி திருத்தம் செய்ய வேண்டும்

செந்நெல் கிராமம் 02 ஆம் வீதி அபிவிருத்தி செய்ய வேண்டும். அங்குள்ள வாசிகசாலை புனர் நிர்மானம் செய்யப்படல் வேண்டும். மற்றும் சிறுவர் பூங்கா அமைத்தல், வீதி அபிவிருத்தி செய்தல் போன்ற அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட வேண்டும்.

நீர் இணைப்பு எடுப்பதற்காக பாதையில் அகழி வெட்டுவதால், அப்பாதை மீண்டும் சீர் செய்யப்படாமை.வடிகாலமைப்புச் சபையும் அவ்வாறே, எனவே அதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.நன்றி.

**கௌரவஉறுப்பினர்ஏ. யூசுப் லெப்பை:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். கௌரவ தவிசாளர் அவர்களே,

இந்த சபை ஊரின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு சபையாகும். ஊரின் அபிவிருத்திக்காக சமூகத்தின் அபிவிருத்திக்காக சேவையாற்றிய அரசியல்வாதிகள் பிரமுகர்களான மர்ஹூம் MA.அப்துல் மஜீட் அவர்களையும் விளித்தவனாக

எல்லா கட்சியினரையும் சேர்த்து உள்ளடக்கியதாக இந்த சபை அமைந்திருப்பது எங்களுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. ஆகவே அதனைக் கொண்டு நாங்கள் எல்லோரும் இந்த ஊர் மக்களின் நலனைக்கருதி சேவைகளையும், ஏனைய அபிவிருத்திகளையும், முன்னெடுப்பதற்கு எங்களுக்கு வாய்ப்பாக இருக்கின்றது.

கௌரவ உறுப்பினர் நஜீம் அவர்களின் தாயாரின் மரணத்திற்கு சபையின்சார்பாக நான் மிகுந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எங்களுக்கு வாக்களித்த அனைத்து மக்களுக்கும் நன்றி கூறியவனாக நான் எந்த கட்சி பாகுபாடுமின்றி செயற்படுவேன் என உறுதியளித்து விடைபெறுகின்றேன் நன்றி வணக்கம்.

**கௌரவ உறுப்பினர் கே.எம். இன்பவதி:**

கௌரவ தவிசாளர் அவர்களே,

மல்வத்தை முதலாம் வட்டடாரத்தில் வாக்களித்து வெற்றிபெறச் செய்த மக்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

தெரு விளக்குகள் திருத்தம் செய்து தர வேண்டும். அதாவது யானையின் முகத்துவாரம் தான் தம்பிநாயக புரம். அங்கு வெளிச்சமில்லை. இருளாக இருப்பதனால் யானைகளின் தொல்லை அதிகமாகின்றது. எனவே தெரு லாம்புகளை திருத்தம் செய்து தருமாறு கௌரவ தவிசாளர் அவர்களை வேண்டிக் கொள்கின்றேன்.

வறுமைக் கோட்டிலுள்ள மக்களுக்கு வாழ்வாதார வசதிகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். திருவள்ளுவபுர மக்களுக்கு நீர்வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மற்றும் பாலர் பாடசாலை அமைத்துக் கொடுக்க வேண்டும்

எனது பகுதி பள்ளத்தாக்கான பகுதியாக இருப்பதனால் தம்பிநாயக புரத்தில் இருந்து மல்வத்தை செல்கின்ற ஒற்றையடிப்பாதை சீர்படுத்தி தருமாறு தவிசாளர் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். மைதானத்திற்கும், எங்களது வீதிக்கும் செல்லும் பாதையினை அபிவிருத்தி செய்து தரவேண்டும்.

முக்கியமாக, கட்டாயமாக தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி வணக்கம்.

**கௌரவஉறுப்பினர் எம்.எஸ். சரீபா**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம்.கௌரவ தவிசாளர் அவர்களே,

இலக்குகள் இல்லாமல் பயணிப்பதுமில்லை பள்ளங்கள் இல்லாமல் மேடுகளும் இல்லை.

சம்மாந்துறை வைத்தியசாலையை அபிவிருத்தி செய்ய வேண்டும்

24 ஆம் இலக்க வாய்கால் திருத்தம் செய்யப்பட வேண்டும். மற்றும் அதனை சுத்தம் செய்தல் வேண்டும். அந்த வாய்கால் ஊருக்குள்ளால் வருவதனால் மக்கள் மிகவும் அசௌகரியங்களை மேற்கொள்கின்றனர்.

டெங்கு ஒழிப்பு விடயங்களை வட்டாரத்தினூடாக செயற்படுத்த வேண்டும்.

எமது மலையடிக்கிராமத்தில் 2000 ஆம் ஆண்டு திறக்கப்பட்ட ஒரு தபாற்கந்தோரும், சிறிய சந்தையும் தற்போது மூடப்பட்டு கிடக்கின்றது. அந்த தபாற் கந்தோறையும் திறந்து, அந்த சந்தையையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தவிசாளர் அவர்களை வேண்டுகின்றேன்.

மலையடிக்கிராமம் 04 இல் உள்ள உப்பிரி மலை வீதி, அல் அக்ஸா பள்ளி வாசலில் இருந்து அல் அர்சத்திற்குச் செல்லும் வீதிகளுக்கு மின்விளக்கு பொருத்தப்பட வேண்டும்.

தற்போது எங்களது பகுதிகளில் இளைஞர்கள் போதைவஸ்த்துக்கு அடிமையாகின்றார்கள். அவர்களைப் பாதுகாப்பதற்கும் நாங்கள் முயற்சியெடுக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.சித்தி நிலூவ்பா:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். கௌரவ தவிசாளர் அவர்களே,

சம்மாந்துறை பிரதேச சபை மக்களின் அடிப்படைத் தேவையான வீடு, மலசலகூடம் போன்ற தேவைகளை நிவர்த்தி செய்தல். மற்றும் பென்களின் கல்வி, தொழில் போன்ற பிரச்சினைகளை தீர்த்துவைக்க கேண்டும்

பெண்களுக்கான நூலகம், சந்தைவாய்ப்பு, பஸ் தரிப்பிடம் போன்றவற்றை அமைத்துத்ருமாறு நான் பிரேரிக்கின்றேன் இவ்விடயங்களை தீர்மானமாக எடுக்குமாறும் சபையைக் கோருகின்றேன். என்று கூறி எனது உரையை முடிக்கின்றேன். நன்றி.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா:**

அஸ்ஸலாமு அலைக்கும் வணக்கம்.கௌரவ தவிசாளர் அவர்களே,

சம்மாந்துறை பிரதேச சபையில் 05 பெண் உறுப்பினர்கள் இருப்பது இதுவே வரலாற்று முக்கியமானதாகும். இன்று அதிகமாக பேசப்படுவது பெண்களின் பிரச்சினைகள்தான். அவற்றைத் தீர்த்துவைக்க வேண்டும்.

வெளி நிறுவனங்களான அரச சார்பற்ற நிறுவனங்களில் சமர்ப்பிக்க Project களை எழுதி அதன் மூலம் நிதிகளைப் பெற வேண்டும் அதற்கான குழு அமைக்க வேண்டும்

வருட வருமானம் 20% அதிகரிக்க வேண்டியிருப்பதனால், நிதி கொள்கையிடல் திட்ட குழுவிற்கு பெண்களையும் சேர்க்க வேண்டும்.

பெண்கள் வியாபாரம் செய்வதற்கும் உத்தரவுப்பத்திரம், சலுகைகளும் வழங்க வேண்டும். டெண்டர் பெறுவதற்கும் பெண்களுக்கு சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

பிரதேச சபையின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலைகளை கண்காணிப்பு குழு போட்டு சிறப்பாக நடைபெறுகின்றதா என்று தங்களின் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

என்னால் செயற்படுகின்ற சேவைகளுக்கு கௌரவ தவிசாளர், கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன் வஸ்ஸலாம்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில்:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். கௌரவ தவிசாளர் அவர்களே,

நாம் முன்னெடுத்துச் செல்கின்ற நல்ல விடயங்கள் பிழையாக சொல்லப்படாமல் நல்ல தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும்.

எனது கருத்து எதிர்வரும் காலங்களில் மக்கள் தொகை கூடிக் கொண்ருெக்கின்றது வளங்கள் குறைந்து செல்கின்றது.

கைகாட்டி சந்தியிலும் ஒரு Roundaboad அமைக்க வேண்டும். எல்லைப்படுத்தப்பட வேண்டும்.

கைகாட்டிக் குளம் புணரமைக்க வேண்டும். Working Park அமைக்க வேண்டும்.

காணிகள் (செட்டவட்டை, அஸ்ரபா வட்டை) வயல் காணிகளை நாம் உள்வாங்கி வீடு கட்டுவதற்கான நிலமாக மாற்றுவதற்கு அனுமதி பெறல் வேண்டும்.

மிருகங்கள் (மாடு) வளர்ப்பதற்கான மாட்டுக்காலை அமைப்பதற்கு பிரதேச சபையின் அனுமதி பெறல் வேண்டும் (சம்மாந்துறையில் அமைக்கப்படவேண்டுமேயானால்)

மத்திய பாடசாலை, அல் மர்ஜான் பாடசாலை வாயிலில் வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் கந்தாலோசித்து கீழ் பாலம் அமைக்க அனுமதி பெற வேண்டும். என்று கேட்டு இந்த வாய்ப்பைத் தந்த வல்ல இறைவனுக்கும் உங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து எனது உரையை முடித்துக் கொள்கின்றேன் நன்றி.

**தவிசாளர்:**

கௌரவ உறுப்பினர் அவர்களின் கருத்துக்களை உள்வாங்கியவனாக,

முதல் கண் சபை நமது சக உறுப்பினர் நஜீம் அவர்களின் தாயார் மறைவுக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவருக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்குமாறு செயலாளர் அவர்களைப் பணித்தவனாக,

இது முதல் அமர்வு என்ற படியினால் நான் என் தவிசாளரின் அதிகாரங்களை பிரயோகிக்காமல் அந்த சட்டதிட்டங்களைப் பின்பற்றாமல் இந்த அமர்வை ஒரு சந்தேசமான முறையில் நடாத்த வேண்டும் என்பதற்காக சில விட்டுக்கொடுப்புகள் இருந்தது. இந்த சபையின் அமர்வுகள், அடுத்து சபையின் அதிகாரங்கள் பற்றி சகல உறுப்பினர்களும் நன்றாக உள்வாங்க வேண்டும்.

நீங்கள் பிரதேச சபையின் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தை வாசித்தால் பிரதேச சபைக்கு என்ன என்ன பொறுப்புக்கள் இருக்கின்றது என்று நமக்குத் தெளிவாகத் தெரியும்.

உள்ளூராட்சி நிறுவன சபை சட்ட ஒழுங்கு விதிமுறைகள் அதை நீங்கள் நன்றாக உள்வாங்கினால் எப்படிப் பேச வேண்டும், யாரை விளித்துப் போச வேண்டும் என்று இருக்கின்றது. இது முதல் அமர்வு. சிலரைத் தவிர பலபேர் முதல் அனுபவம். அந்த அனுபவத்தை கெடுக்ககூடாது என்பதற்காக ஒவ்வெருவரின் பேச்சையும் தட்டிக் கழிக்காமல் இந்த அறிவுரையை வழங்கியவனாக,

நீங்கள் எல்லோரும் ஆக்க பூர்வமான கருத்துக்களை முன்வைத்திருக்கின்றீர்கள். நீங்கள் உங்கள் ஆதங்கங்களை வெளிப்படுத்தியிருக்கின்றீர்கள். இவை எல்லாவற்றையும் உள்வாங்கி அடுத்த அமர்வுக்குள் அதற்குரிய அறிவித்தல்களை உங்களுக்கு கிடைக்கப் பெற நான் முயற்சி செய்வேன்.

பொதுவாக சம்மாந்துறை இன்று ஒரு கிராமமாக இருந்து பெரிய நகரமாக மாறியுள்ளதை நாம் எல்லோரும் அறிவோம். நமக்கு இந்த ஊர் நகர சபையாக ஆக்குவதற்கு முன் சரியான ஒரு திட்டமிட்ட நகரமாக இருக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். இந்த அரசின் நகர அபிவிருத்தி திட்டமிடல் அமைச்சர் கௌரவ றெரவ்ப் ஹக்கீம் அவர்களை சபை அனுகி, பிரதேச சபையின் பங்கெடுப்போடு ஒருநகர அபிவிருத்தி திட்டம் அமைக்கப்பட்டு, அந்த திட்டத்தின் படி இந்த ஊரில் சகல அபிவிருத்தி வேலைகளையும் நாம் முன்னெடுக்க வேண்டும். ஏனென்றால் உறுப்பினர் முஸம்மில் கூறியவாறு அன்று நான் சிறுவனாக இருக்கும் போது தீக்கவாபி சந்தி இன்று இந்த நகரத்தின் மையமாக மாறியிருக்கின்றது.

நாம் இந்த மண்ணை விட்டுப் போவதற்குள் கைகாட்டிச் சந்தி மையமாக மாறலாம். ஏனெனில் அந்த வேகத்தில்தான் சனத்தொகை அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. அப்படியானால் இந்த நகரத்துக்கொரு திட்டம் வேண்டும். நமக்கு முன் இருந்த அரசியல் வாதிகளின் தூர நோக்கினால் தான் இன்று இந்த ஊரின் மற்ற ஊர்களைவிட பாதைகள் விசாலமாக இருப்பதற்கு காரணம் அவர்களின் தூர நோக்கு. அதை ஒரு படிப்பினையாக வைத்து நாம் நமது சகல அபிவிருத்தி வேலைகளையும் செய்யும் போது அது ஒரு திட்டத்தின் அடிப்படையில் தான் செய்ய வேண்டும். ஒரு பாதை செய்வெதென்றால் அந்தப் பாதையினூடாக வருகின்ற விளைவுகளை உள்வாங்கியவாறு தான் அந்த பாதையின் வேலைகள் ஆரம்பிக்க வேண்டும். வடிகால் அமைப்பதென்றால் வடிகால் முடிவிலிருந்து ஆரம்பிக்க வேண்டுமேயொளிய ஆரம்பத்தில் இருந்து ஆரம்பிகக் முடியாது.அப்படியானால் நமக்கென்று ஒரு திட்டம் இருக்க வேண்டும். அந்த திட்டத்திட்டத்திற்கு அமைச்சர் அவர்களை அனுகி அந்த திட்டத்தை செய்து நமது நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும்,

கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்கள் கூறியது போல் இந்த ஊரின் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட சபை இது இந்த சபையின் கௌரவ உறுப்பினர்கள் இந்த ஊரின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் திட்டங்களில் கலந்து கொள்ளும் உத்தியோகத்தர்களாக கௌரவ அங்கத்தவர்களாக இருக்க வேண்டும், என்று இந்த சபையின் தீர்மானமாக மஜிலிஸ் அஸ்ஷுறா, Hospital Committe, Divisional Development Committee அப்படியானவைகளுக்கு நான் எழுத்து மூலம் அறிவித்து உயர் மட்டத்தில் அதற்கு சட்ட பூர்வமான அங்கீகாரத்தை எடுப்பதற்கு நான் முயற்சி செய்கின்றேன்.

பாலர் பாடசாலைகள் ஓர் சர்ச்சைக்குரிய விடயம். சம்மாந்துறை பிரதேச சபையில் இரண்டு பாலர் பாடசாலைகளை நாம் கையேற்றோம். அதை நான்காக்கினோம். ஆனால் இன்று மாகாண சபை அந்தப் பொறுப்பை கையேற்ற நிலையில் அன்று ஆளுனருடன் பேசிச்கொண்டிருக்கும் போது அதில்

பிரச்சினைகள் எழலாம். அதை மாகாண சபையுடன் பேசி எப்படி இந்த பாலர் பாடலாலைகள் அதுவும் வறுமையில் வாடும் குடும்பங்கள், சமுர்த்தி பெறும் குடும்பங்களின் குழந்தைகளுக்கு எப்படி இந்த சபையினால் அல்லது மாகாண சபை உதவியோடு இந்த பாலர் பாடசாலையை நிறுவுவதா? அல்லது இருக்கும் பாலர் பாடசாலைகளுக்கு உதவி செய்வதா? இந்த முடிவை நாம் மாகாண சபையுடன் சேர்ந்து அந்த குழந்தைகள் அடிப்படை கல்விகளை கற்பதற்கு நாம் சகல உதவிகளையும் செய்ய வேண்டும் அதற்கு ஒரு வழி தேட வேண்டும்.

பெண்கள் சரித்திரம் படைக்கின்றீர்கள். இந்த முதல் அமர்வில் 05 பெண்மணிகள் சம்மாந்துறை அரசியல் சரித்திரத்தில் ஆக்க பூர்வமாக கருத்துக்களை வெளிப்படுத்தினீர்கள். அந்த தாய் சேய் நிலையங்கள் இந்த சபைக்குப் பொறுப்பானது. அது MOH உடன் சேர்ந்து உங்களின் மேற்பார்வையில் ஒவ்வெரு அங்கத்தவரின் மேற்பார்வையில் அது செய்யப்பட வேண்டும். அதில் உங்களது பங்களிப்பு தேவைப்படும்.

உறுப்பினர் சரீபா கூறிய அந்தக் கல்லரிச்சலில் 24, 29 கால்வாய் பராமரிப்பின்மை நிதி பாரிய செலவு நமக்கு அப்பால் பட்டது.ஆனால் சென்ற சபையில் எங்களுக்கு ஒரு திட்டம் இருந்தது. அது நமது எல்லைக்குள் வரும் 24 சனல் அழகு படுத்தி மக்கள் பாவிக்கக்கூடிய இடங்களாக மாற்றி அந்த றிசவேசன் காணிகள் எல்லாவற்றையும் சபையின் அங்கீகாரத்துக்குள் கொண்டு வந்து அழகு படுத்த வேண்டும். நாம் எல்லோரும் சேர்ந்தால் நமது ஊரை நமது காலத்துக்குள் நகர சபையாக மாற்றுவதற்கு நீங்கள் எல்லோரும் இன்று நாம் ஒற்றுமைப்பட்டு இந்த ஊருக்காக உண்மையாக பணிபுரிவோம். என்ற செய்தியை விடுத்திருக்கின்றோம். அந்தப்பணி தொடர வேண்டும். இந்த முதல் அமர்வில் ஒற்றுமையாக இருந்து உங்களின் கருத்துக்களை முன் வைத்து எல்லா விடயங்களுக்கும் ஏகமனதாக முடிவு எடுத்து ஆரம்பித்ததற்காக உங்கள் எல்லோருக்கும் நன்றி கூறியவனாக,

இந்த சபையில் குறைபாடுகள் இருந்தும் ஏற்பாடு செய்த செயலாளர் அவர்களுக்கும், முதல் தடவையாக கௌரவமாக இருந்த பார்வையாளர்களாக இருந்து ரசித்த பொது மக்களுக்கும், நமது காரைதீவு பிரதேச சபையினை இளம் தவிசாளர், ஒரு முன்னெடுப்பு, அவர் ஒரு அமர்வை தான் அமர்வதற்கு முன்னர் அனுபவிக்க வேண்டும் என்று முழு நேரமும் அவதானித்ததற்காக நாங்கள் பிழை செய்திருந்தால் எங்களை மன்னித்து எங்களிடம் இருந்து கற்று இதை விட சிறப்பான ஒரு சபையை உருவாக்க வேண்டும். நீங்கள் வழிநடாத்த வேண்டும் என்று கேட்டு உங்கள் எல்லோருக்கும் நன்றி கூறி இந்த அமர்வை முடிவுக்குக் கொண்டு வருவோம் வஸ்ஸலாம்.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.